**கவனிக்க.-** *2014.09.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1882 - 2014 සැප්තැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2014.09.26

*1882 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1480 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1486 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, செத்தெம்பர் 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிபிட்டிய | மதுராகொட பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

9-1181

---

## தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

தங்க வர்ணம் தீட்டுபவர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தில் தற்போது தங்க வர்ணம் தீட்டுபவர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :**

1.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

1.2 விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

1.3 பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையின் நிரந்தரப் பதவியில் உள்ளவர் களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

1.4 கல்வித் தகைமைகள்.- கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.5 தொழில்சார் தகைமைகள்.- அச்சு நுட்பம் தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழில் ஆணைக்குழுவினால் முடிவுரைக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில் மட்டத்தில் (NVQ) குறைந்தது இரண்டாம் தகைமையைப் பெற்றிருத்தல்.

1.6 அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

1.7 பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய 2014.10.24 ஆந் திகதியன்று அத்தகைமைகளை சகல வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**2. சேவை நிபந்தனைகள் :**

2.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் : PL-2-2006(A)
சம்பள அளவுத்திட்டம் : ரூ. 12,210-10x130-10x145-10x160-12x170-18,600.
(மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்ப சம்பள நிலைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.)

2.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

2.3 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றத் தயாராய் இருத்தல் வேண்டும்.

**3. ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை.**- மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

3.1 தொழில்சார் பரீட்சை :

| பாடங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| துறைசார் அறிவைப் பரிசீலித்தல் | 100 | 40% |

இங்கு அச்சு முறை தொடர்பான அறிவு, பழைய மற்றும் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தல், பல்வேறு மூலப் பொருட்களைப் பயன்படுத்துகையில் கட்டுப்படுத்தல் தொடர்பான அறிவு மற்றும் ஆவணங்களின் பாதுகாப்பிற்குச் சேதம் ஏற்படாதவாறு பயன்படுத்தும் அறிவு என்பன தொடர்பில் பரிசீலித்து புள்ளிகள் வழங்கப்படும்.

3.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போதே தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

தொழில்சார் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுள் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கானோர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு அதன்போது வெளிக் காட்டப்படும் திறமைகளுக்கேற்ப நடைமுறையிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானோர் இணைத்துக்கொள்ளப்படுவர்.

**4. விண்ணப்பப்படிவத்தைச் சான்றுப்படுத்தல்.**- விண்ணப்பதாரிகளது விண்ணப்பப்படிவமானது மத நிலையப் பொறுப்பு மதகுருமார், சமாதான நீதவான், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது 2,40,360 ரூபாவிற்கு குறையாத ஆரம்ப வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க உத்தியோகத்தர் மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

**5. விண்ணப்பிக்க வேண்டிய முறை.**- விண்ணப்பப்படிவங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப முறையாகப் பூர்த்திசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தங்க வர்ணம் தீட்டுபவர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு 2014.10.24 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் முன்னர் "பணிப்பாளர், தேசிய சுவடிக்கூடத் திணைக்களம், இல. 7, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 7" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் தெரிவிக்கின்றேன்.

கலாநிதி சரோஜா வெத்தசிங்ஹ,
தேசிய சுவடிக்கூடப் பணிப்பாளர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

**தங்க வர்ணம் தீட்டுபவர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. முகவரி :
   (i) தனிப்பட்ட முகவரி :----.
   (ii) அலுவலக முகவரி :----.

4. தொலைபேசி இலக்கம் :
   (i) இல்லம்/கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.
   (ii) அலுவலக தொலைபேசி இலக்கம் :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2014.10.24 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. பால் (பெண்/ஆண்) :----.

8. கல்வித் தகைமைகள் :
கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை (முதல் அமர்வு)
பரீட்சை இலக்கம் :----.
வருடம் :----.
மொழி மூலம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .................................... | ............................................ |
| 2. .................................... | ............................................ |
| 3. .................................... | ............................................ |
| 4. .................................... | ............................................ |
| 5. .................................... | ............................................ |
| 6. .................................... | ............................................ |
| 7. .................................... | ............................................ |
| 8. .................................... | ............................................ |
| 9. .................................... | ............................................ |
| 10. .................................... | ............................................ |

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை (இரண்டாம் அமர்வு)
பரீட்சை இலக்கம் :----.
வருடம் :----.
மொழி மூலம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .................................... | ............................................ |
| 2. .................................... | ............................................ |
| 3. .................................... | ............................................ |
| 4. .................................... | ............................................ |
| 5. .................................... | ............................................ |
| 6. .................................... | ............................................ |
| 7. .................................... | ............................................ |
| 8. .................................... | ............................................ |
| 9. .................................... | ............................................ |
| 10. .................................... | ............................................ |

9. தொழில்சார் பாடநெறிகள் :

| பாடநெறி | நிறுவனம் | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

**க. வே.**- சகல சான்றிதழ்களினதும் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.

10. தற்போது ஏதேனுமொரு பதவியை வகிப்பவராயின் அது தொடர்பான விபரங்கள் :

(i) பதவியும் தரமும் :----.
(ii) நியமிக்கப்பட்ட திகதி :----.
(iii) நிறுவனம் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும், இங்கு வழங்கப்பட்டுள்ள யாதாயினுமொரு தகவல் உண்மைக்கு மாறானதென்றும் பிழையானதென்றும் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றதன் பின்னர் அது தொடர்பாக தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்பட முடியும் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

**அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையின் ஊழியராக இருப்பின் நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

............................................ திரு./திருமதி/செல்வி இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/ நிரந்தர/ தற்காலிக/ அமைய ஊழியராகச் சேவையாற்றி வருகின்றார் என்றும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாதென்றும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.
(பதவி முத்திரை).

திகதி :----.

9-909

## அரச சேவைகள் ஆணைக்குழு

*கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு*

### இலங்கையில் கால்நடை வள அபிவிருத்தியைத் துரிதப்படுத்துமுகமாக சேவைகள் வழங்கும் முறைமையை பலப்படுத்துவதற்காக, பிரதேச கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார கூறுகள் அமைப்பது சம்பந்தமாக இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு

இலங்கையில் கால்நடை வள அபிவிருத்தியைத் துரிதப்படுத்துமுகமாக சேவைகள் வழங்கும் முறைமையை பலப்படுத்துவதற்காக, பிரதேச கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார கூறுகள் அமைப்பதற்கான முன்னோடிக் கருத்திட்டத்தின்கீழ் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III இல் 114 (நூற்றுப்பதினான்கு) கால்நடை மருத்துவ அதிகாரி பதவியில் நியமிப்பதற்குத் தகைமையுடையவர்களைத் தெரிவுசெய்வதற்காக கால்நடை மருத்துவ விஞ்ஞானப் பட்டதாரிகளிட மிருந்து அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இவ்வறிவித்தலின் முடிவிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், த. பெ. இல. 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி பதவி" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2014.10.17 ஆகும்.

**குறிப்பு :**

* விண்ணப்பப்படிவம் அல்லது அதன் தொடர்பிலான கடிதங்கள் தபாலில் அனுப்பும்போது காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

* ஆட்சேர்ப்பு செய்யப்படும் அலுவலர்கள் வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கு அமர்த்துவது கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

1. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

(i) கால்நடை மருத்துவ அதிகாரி பதவிக்கு பேராதனை பல்கலைக்கழகத்தில் கால்நடை மருத்துவ பீடத்தினால் வெளியிடப்படும் திறமை பட்டியல் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் கால்நடை மருத்துவ பட்டத் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள், இலங்கை கால்நடை மருத்துவச் சபையில் பதிவுசெய்வதற்கான தகைமையைப் பூர்த்திசெய்துள்ள ஆண்டுக்கான பதிவுத் திகதியின் பிரகாரம் முறையே, திறமைப் பட்டியலில் கடைசியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) வெற்றிட எண்ணிக்கையில் நூற்றுப்பத்து (110%) வீதத்துக்குச் சமமான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், திறமைப் பட்டியலின் தொடர் முறையின் பிரகாரம் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(iii) நியமனதாரிகளின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி, அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அவர்கள் விண்ணப்பித்துள்ள இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் பட்டியலிடப்பட்ட பதவியினை நிரப்புவதற்காக நியமிக்கப்படுவர்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 01/2014 ஏற்பாடுகள் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகள் இந்நியமனம் ஏற்றுக்கொண்ட திகதி முதல் 5 ஆண்டுகளைக் கடக்க முன்னர், அரச கொள்கைக்குப் பொருத்தமான அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுள்ளமையை நிரூபித்தல் வேண்டும். மேலும் நீங்கள் இந்நியமனத்திற்கான தகுதியைப் பூர்த்திசெய்துள்ளமை ஆங்கில மொழியென்றால், உங்களின் விருப்பப்படி அரச கரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் மொழி இரண்டில் ஒரு மொழிக்கான தேர்ச்சியை நியமனத் திகதியிலிருந்து 3 ஆண்டுக்குள் அதாவது தகுதிகூர்காண் காலத்திற்குள்ளும் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சி நியமனம் பெற்ற திகதியிலிருந்து 5 ஆண்டுகளுக்குள்ளும் பெறப்படல் வேண்டும்.

(iv) ஏனைய சேவைக் கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் 1840/51 ஆம் இலக்க 2013.12.13 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் நியதிச் சட்டக் கோவை மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் திருத்த கட்டளைகளுக்கும் அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை நியதிகளுக்கும், திணைக்களங்களுக்கான ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு SL-1-2006 ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூ. 53,555 மாதாந்தச் சம்பளம் உரித்துடையது. (2006.04.25 ஆந் திகதிய பொ. நி. சு. 6/2006 ஆம் இலக்கத்தில் SL-1-2006 சம்பளத் தொகுதி)

*4.* **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கால்நடை மருத்துவ விஞ்ஞானம் பற்றிய நான்கு ஆண்டுகால பட்டம்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமை :**

(i) சகல அபேட்சகர்களும் இலங்கை நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பணிபுரிவதற்கும்,

(ii) பதவியில் கடமையாற்றுவதற்குப் போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சிறந்த தேகாரோக்கிய நிலை மருத்துவ பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) கால்நடை மருத்துவப் பட்டதாரியாகச் செல்லுபடியாகும் திகதி 2013.12.31 அல்லது அதற்கு முன்னைய திகதியாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்திலும் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று, இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **நேர்முகப் பரீட்சை :**

8.1 பொதுவான நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).- நிறைவேற்றுவதற்கு உத்தேச நோக்கங்கள்.- ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகை மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா ? என்பதனைப் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமைகளைப் பரிசீலித்தல்.

9. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்படிவம் 22-29 செ.மீ. அளவில் A4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும்போது கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(a) பிறப்புச் சான்றிதழ் ;

(b) பட்டம் மற்றும் அதன் தொடர்பிலான சான்றிதழ்கள் ;

(c) அண்மையில் பெறப்பட்ட இரண்டு நன்நடத்தைச் சான்றிதழ்கள் (அதில் ஒன்று பிரதேச கிராம உத்தியோகத்தரிடம் பெறப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிசெய்யப்படல் வேண்டும் ;

(d) சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்துள்ள உயர் பரீட்சைகளின் சான்றிதழ் ;

(e) கால்நடை மருத்துவராக இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்.

10. **வேறு ஏற்பாடுகள் :**

(i) இவ்வர்த்தமானி அறிவித்தலில் விதிக்கப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

(ii) வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாமை அல்லது ஒரு பகுதியை மாத்திரம் நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரச சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

(iii) இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(iv) அபேட்சகர் ஒருவருக்கு தகைமைகள் இல்லையென வெளிப்படும் பட்சத்தில் அவரின் அபேட்சகத் தன்மை இரத்துச்செய்யப்படும்.

(v) அபேட்சகர் ஒருவரினால் முன்வைக்கப்பட்டுள்ள ஏதாவது விடயமொன்று பிழையானது எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என வெளிப்படுமாயின், அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்று வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் அவரை சேவையிலிருந்து நீக்க முடியும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எல். திசேரா,
செயலாளர் (பதில்),
கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் III கால்நடை மருத்துவ அதிகாரி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின் உடனடியாக அதுபற்றி அறிவிக்கப்படல் வேண்டும்) :----.

4. நிரந்தர வதிவிடத்தைச் சேர்ந்த-

(i) மாகாண சபை :----.

(ii) மாவட்டம் :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. (அ) நீங்கள் இலங்கை பிரசையா என்பது பற்றி :----.

(ஆ) இனம் (சிங்களவர்/இலங்கைத் தமிழர்/இந்தியத் தமிழர்/ முஸ்லிம்கள்/ஏனையவை) :----.

7. (அ) பால் (ஆண்/பெண்) :----.

(ஆ) விவாகமானவரா/விவாகமாகாதவரா/விதவை என்பது பற்றி :----.

8. கல்வித் தகைமைகள் :

| சித்தி பெற்றுள்ள பட்டம்/ பட்டப்பின் படிப்புத் தகைமை | வகுப்பு | பல்கலைக் கழகம் | பட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

9. இலங்கை கால்நடை மருத்துவச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட இலக்கமும் திகதியும் :----.

10. சேவை விபரங்கள் (தற்போது நிரந்தரப் பதவி வகிப்பவராயின்) :----.

| தற்போது வகிக்கும் பதவி | சேவைக் காலம் | | சேவையாற்றும் இடம் | திணைக்களம்/ மாகாண சபை |
|---|---|---|---|---|
| | இருந்து | வரை | | |
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

11. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் நான் அறிந்த அளவில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் கூறி இத்தால் உறுதிப்படுத்துகிறேன். என்னால் வெளியிடப்பட்ட தகவல்கள் பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்வதற்கு முன்னர் வெளிப்படுமாயின் நான் தகுதியற்றவர் எனவும், இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிந்துள்ளேன். நான் எந்தவொரு நீதிமன்றத்திலும் தண்டனைக்குரிய குற்றத்திற்கு ஆளாகவில்லையெனவும் இத்தால் எனது வழமையான கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் அபேட்சகர்களுக்கு மட்டும் ஏற்புடையது)

1. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................................ இத்திணைக்களத்தில் ................................................... மாகாண சபையில் ..................................... பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் எனவும் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அவரின் தனி நபர் கோவையின் பிரகாரம் சரியானது என உறுதிப் படுத்துகிறேன். இவ் அலுவலர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை இத்திணைக் களத்திலிருந்து/மாகாண அரச சேவையிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

பதவி முத்திரை :----.
முகவரி :----.
திகதி :----.

9-1043

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ Level 2/3/4 ) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2014/2015**

நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 2/3/4 (NVQ level 2/3/4) பாடநெறிக்காக கீழ்க்காணும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களுள் அவர்களது தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய இப்பாடநெறிக்குத் தேவையான அளவுக்கேற்ப மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. இப்பாடநெறியைப் பயில்வதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள்-

(i) நற்பண்புகள் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போதே சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் ;

(iv) 18 வருடங்களுக்கும் 45 வருடங்களுக்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும் ;

(v) இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 11.7" x 8.3" (A4) அளவிலான தாளில் தாமாகவே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். இலக்கம் 14 இன் கீழ் குறிப்பிடப்பட்டபடி ரூபா 20 பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன் மேல் தமது வழமையான கையொப்பத்தையிட்டு பெறுமதிநீக்கம் செய்திருத்தல் வேண்டும். உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2014.10.15 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்க வகையில் நில அளவையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் "நில அளவையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களம், த.பெ. இல. 506, கிருல வீதி, கொழும்பு 5" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

5. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. இப்பாடநெறி 7 வாரகால முழுநேர பாடநெறியாகும். கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் இரண்டு வார முழுநேர வதிவிடப் பாடநெறியுடனும், களத்தில் நான்கு வார நடைமுறைப் பயிற்சி பாடநெறியுடனும் நில அளவையாளர் நாயக அலுவலகத்தில் ஒரு வார பாடநெறியுடனும் கூடியதாக மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமையும், தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் பயிற்சிக் காலப்பகுதியில் உபயோகிக்கப்படும் மின்சார மற்றும் நீர் கட்டணமாக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 1,000 அறவிடப்படுவதுடன் பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பாடநெறி ஆரம்பத் திகதியன்று அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் இக்கட்டணத்தை செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| பகுதி | காலம் | நடைபெறும் இடம் | வதிவிடம் | உணவு / பானம் |
|---|---|---|---|---|
| 1 | 2 வாரம் | அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை | வழங்கப்படமாட்டாது | வழங்கப்படமாட்டாது |
| 2 | 4 வாரம் | வெளிக்களத்தில் அமைந்துள்ள பிரதேச நில அளவை காரியாலயத்துடனான நடை முறைப் பயிற்சி | வழங்கப்படமாட்டாது | வழங்கப்படமாட்டாது |
| 3 | 1 வாரம் | நில அளவையாளர் அலுவலகம் | வழங்கப்படமாட்டாது | வழங்கப்படமாட்டாது |

7. பாடநெறி சிங்களம் /தமிழ் மொழிகளில் நடாத்தப்படும்.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்கின் பிரகாரம் தகுதியானவர்கள் நேர்முகப்பரீட்சை மூலமாக தெரிவுசெய்யப்படுவர்.

9. ஆவணங்களினதும், சான்றிதழ்களினதும் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தமது தகைமைகளை நிரூபிப்பதற்குத் தேவையானதும் ஏற்கக்கூடியதுமான ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின்போது வழங்கத்தவறும் விண்ணப்பதாரிகள் தகைமையற்றவராகக் கருதப்படுவர்.

10. சகல ஆவணங்களினதும் நம்பகத்தன்மைக்கு விண்ணப்பதாரியே முழுப் பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மையை உறுதி செய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. இப்பயிற்சிக் காலம் முடிவடைந்த பின்னர் பயிற்சி பெற்றுக் கொண்டவர்களின் திறமையினை மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நியமித்த அதிகாரிகளினால் பரீட்சிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிநெறிக்கு முன்னரான மதிப்பீடு மற்றும் இறுதியான மதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் பயிலுநர்களுக்காக

மாத்திரம் அவர்களின் அறிவு மட்டத்திற்கேற்ப தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level) குறிப்பிடப்பட்ட சான்றிதழினை இலங்கை நிலஅளவைத் திணைக்களம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகியன இணைந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 2014/2015 ஆம் ஆண்டில் நடத்தப்படுவதற்குரிய இப்பாடநெறியை நடாத்துதல் ஒரு பாடநெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர் தொகை அல்லது வருடத்தினுள் நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகளின் தொகை போன்றவை குறித்த தீர்மானங்கள் நில அளவையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

பி. எம். பி. உதயகாந்த,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்ளம்,
த.பெ. இல. 506,
கொழும்பு 5,
www.survey.gov.lk
2014, செத்தெம்பர் 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ land 2/3/4) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2014/2015 ஆம் கல்வியாண்டு**

1. பாடநெறியின் பெயர் :----.

2. பாடநெறிக் குறியீட்டு இலக்கம் :----.

3. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

4. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :----.
மின்னஞ்சல் :----.

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. மாவட்டம் :----.
தேர்தற் தொகுதி :----.
பிரதேச செயலாளர் பிரிவு :----.
கிராம அலுவலர் பிரிவு :----.

9. பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

2014.10.15 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. பால் (ஆண்/பெண்) :----.

11. சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான தகைமைகள் வர்த்தமான அறிவித்தலுக்கமைய நீங்கள் பெற்றுள்ள தகைமைகள் :

பாடநெறியில் நுழைவதற்கான தகைமைகள் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :
பெற்றுள்ள NVQ பாடநெறி பயின்ற சேவைக் காலம் சான்றிதழின் பெயர், நிறுவனத்தின் பெயர், அனுபவம் இருப்பின் அதுபற்றிய விபரம் (சுருக்கமாக வருடம், மாதம் ) :

12. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை பெறுபேறுகள் (இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது) :

| பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

(ஆ) க. பொ. த (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றி இருப்பின் அதன் பெறுபேறுகள் :

| பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

13. இதற்கு முதலில் NVQ பாடநெறியினைப் பயின்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.
பாடநெறியின் இலக்கம்/குறியீடு :----.
NVQ தகைமை பட்டம் :----.
நிறுவனம் :----.

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.-** இப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு உட்பட்ட வரையில் உண்மையானவை எனவும், விண்ணப்பித்துள்ள பாடநெறிக்குத் தேவையான தகைமைகள் எனக்குண்டு என்றும் இத்தால் உறுதி செய்கின்றேன். மேலும் இப்பாடநெறி தொடர்பான அனைத்து சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு நடப்பேன் என்றும் நில அளவையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(20 ரூபா பெறுமதியான முத்திரையின் மீது ஒப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும் ).

திகதி :----.

9-869

## புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

*சிறைச்சாலைகள் திணைக்களம்*

### இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் II ஆம் தர ஜெய்லர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் பதவி வெற்றிடமாகியுள்ள II ஆம் தர ஜெய்லர் (ஆண் / பெண்) மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் (ஆண்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) இப்பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்படுவது இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஜெய்லர் (ஆண்/பெண்) II ஆம் தரம் மற்றும் புனர்வாழ்வு உத்தியோகத்தர் II ஆம் தரம் (ஆண்) பதவிகளுக்கே ஆகும்.

(2) எழுத்துமூலப் பரீட்சை.- இப்பரீட்சை கீழ்க்குறிப்பிட்டுள்ள 3 வகை வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதாகும் :

(i) நுண்ணறிவுப் பரீட்சை ;
(ii) பொது அறிவுப் பரீட்சை ;
(iii) கூட்டல் உட்பட கணிதம்.

2. **பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சை நடைமுறை.**- இப்பரீட்சை 2015, தை மாதம் அட்டவணை 1 இல் குறிப்பிட்டுள்ள நாடு முழுவதும் அமையப்பெற்ற பிரதான நகரங்களில் நடாத்தப்படும். கீழ்க்காணப்படும் அட்டவணை 1 இல் குறிப்பிட்டுள்ள நகரங்களுள் பரீட்சைக்காகத் தோற்ற விரும்பும் நகரம், எண்ணுடன் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பித்த நகரத்தை பின்பு மாற்றம் செய்ய எவ்விதத்திலும் இடமளிக்கப்படாது. ஆனால் ஏதேனுமோர் நகரில் பரீட்சை நிலைய மொன்றைத் தாபிப்பதற்குப் போதுமான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காவிடத்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தில் இரண்டாவது தேர்வின்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் நகரில் அல்லது அண்மித்த வேறு நகரில் அல்லது நிறுவப்படும் வேறு பரீட்சை நிலையத்திற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவர். உத்தேசிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலும் அல்லது கூடிய தொகையோ அல்லது பரீட்சை நிலையமொன்றைத் தாபிப்பதற்குப் போதுமான விண்ணப்பதாரிகள் சேராதவிடத்து பரீட்சை கொழும்பில் மட்டும் நடாத்துவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை 1**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலநறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. தேர்வு செய்யப்படும் முழுப்பதவி வெற்றிடங்களினதும் எண்ணிக்கை 143 ஆகும். (II ஆம் தர ஜெய்லர் (ஆண்) - 116, II ஆம் தர ஜெய்லர் (பெண்) - 12, II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் (ஆண்) - 15] இறுதிப் பதவி வெற்றிடத்திற்கு அல்லது சில பதவி வெற்றிடங்களுக்கு சம புள்ளிகள் பெற்றவிண்ணப்பதாரிகள் வெற்றிட எண்ணிக்கையைத் தாண்டி நிற்கும் சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவதைப் பற்றிய முடிவு செயற்பாட்டு விதிமுறைக் கோட்பாட்டின் 80 ஆவது பந்தியின் பிரகாரம் அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க முடிவு செய்யப்படும். நியமனம் நடைமுறை செய்யப்படும் திகதி சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் முடிவு செய்யப்படும்.

4. **சேவை ஒப்பந்தங்கள் :**

4.1 அரச சேவையின் நியமனக் கட்டுப்பாடு செய்யப்படும் பொதுக் கோட்பாடுகளுக்கும், தாபனக் கோவையின் மற்றும் நிதிக் கோட்பாட்டு சட்டமுறைகளுக்கும், எண் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிக்குரிய அதிவிசேட அரச அறிக்கைப்பத்திரத்தில் வெளியிடப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு சட்ட முறைமைகளுக்கும், கீழ்ப்படிந்த விண்ணப்பதாரி குறிப்பிட்ட பதவியில் II ஆம் தர பதவிக்கு நியமிக்கப்படும்.

4.2 இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது. விதவைகள் அநாதைகள் / தபுதாரர் அநாதைகள் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 இப்பதவி மூன்று வருட நன்நடத்தைக் கால எல்லைக்கு உட்பட்டது. II ஆம் தர பதவிக்கு சேர்க்கப்பட்டு மூன்று வருட காலத்துள் 1 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சையிலும், நியமனம் பெற்று 7 வருட காலத்திற்குள் இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சையிலும் சித்திபெறல் வேண்டும்.

4.4 பொது நிர்வாக சுற்றுநிருப இல. 01/ 2014 இற்கு இணங்க மற்றும் அதற்குச் சார்ந்த சுற்றுநிருபங்களுக்கு இணங்க உரிய அரச கரும மொழியில் நிபுணத்துவம் பெறல் வேண்டும்.

4.5 தமக்கு வழங்கப்பட்ட பதவிக்குரிய சேவை உரிய திகதியில் பொறுப்பேற்காத மற்றும்/அல்லது நியமிக்கப்பட்ட பதவிக்கு அல்லது நியமிக்கும் பிரதேசத்தில் சேவையைப் பொறுப்பேற்க நிராகரிக்கும் அல்லது விண்ணப்பதாரிகளின் நியமனத்தை

இரத்துச்செய்வதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கு உரிமையுண்டு. II ஆம் தர ஜெய்லர்/II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்கள் நியமனம் பெற்று முதல் 5 வருடங்கள் நிரந்தர வதிவிடத்திலிருந்து வெளியே சிறைச்சாலைகளில் மணமாகாதவர் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் தங்கி சேவையிலீடுபடுவதற்கு இணங்குதல் வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்றுநிருபம் இல. 06/2006 (IV) இல் RS 2-2006ஏ (படி 1) சம்பள வகைக்கு உரித்தாகும். இச்சம்பள வகைக்குரிய சம்பள அளவுத்திட்டம் கீழே காணப்படும்படியாகும்.

ரூ. 15,850 - 7 x 180 - 2 x 240 - 8 x 320 - 17 x 375 - ரூ. 26,525 (மாதாந்தம்).

6. **ஆட்சேர்ப்புத் தகைமைகள்** :

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் சேவையிலீடுபடுவதற்குரிய உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியம் கொண்டவராதல் ;

(iv) குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலம் ;

(v) வெளிச்சுவாசத்துடனான மார்பின் அளவு 32 அங்குலமாக இருத்தல் வேண்டும் (பெண்களுக்கு உரித்தாவதில்லை) ;

(vi) ஆண்கள் மாத்திரமே புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் ;

(vii) நன்நடத்தை அற்றவராக ஏதேனும் குற்றம் சம்பந்தமாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக கருதப்பட்டிருப்பின், மேற்கூறிய பதவிகளுக்கு நியமனம் பெறுவதற்கு முழுமையாக தகுதியற்றவராவீர்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் ஆங்கிலம் தவிர) பழைய பாடத்திட்டத்தின்கீழ் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் ;

அத்துடன்

சிங்கள/தமிழ் மொழி மற்றும் எண் கணிதம்/கணிதம்/வர்த்தக எண் கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (ஒரு அமர்வில் 5 பாடங்களுக்கு குறையாது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

முதலாம் மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உட்பட 4 பாடங்களுக்கு (பீ) தரத்திலான சித்திகளுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் தே. க. பொ. சா. பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (ஒரு அமர்வில் 5 பாடங்களுக்கு குறையாது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

அல்லது

மொழி, கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (ஒரு அமர்வில் 5 பாடங்களுக்குக் குறையாது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(இ) பிற தகைமைகள்.- II ஆம் தர நலன்புரி உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது இலங்கைச் சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தின் தொழில்சார் சமூக சேவைகள் பட்டம் (டிப்ளோமா) பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) வயது :

*II ஆம் தர ஜெய்லர்.*- 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

*II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்.*- 24 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(உ) தகைமைகள் பற்றிய எல்லைகள்.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு உரிய அனைத்து தகைமைகளும் விண்ணப்பம் கோரும் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா (ஐந்நூறு ரூபா) தொகையை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு முன்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பின்கீழ் 2003:02:13 இற்குரிய வரவில் செலுத்தப்பட வேண்டும். பிரதேச செயலகம்/மாவட்ட செயலகத்தில் குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும். பிரதேச செயலகத்தில்/மாவட்டச் செயலகத்தில் விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். எந்தவொரு காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எதிர்கால பயனுக்காக தன்வசம் வைத்திருத்தல் வேண்டும்.)

8. **விண்ணப்பிக்கும் முறைமை** :

8.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அது தாளின் இரு புறமும் பாவித்து 8.27" x 11.69" (A4) அளவிலான தாளில் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியால் தயார் செய்யப்பட்ட அல்லது தட்டச்சுப் பொறியால் தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களும் பாவிக்க முடியும். தலைப்பு இல. 1 தொடக்கம் 4 வரை முதலாம் பக்கத்திலும் 5 தொடக்கம் 11 வரை இரண்டாம் பக்கத்திற்கும் மீதியை 3 ஆம் பக்கத்திற்கும் அடங்குமாறு அமைத்தல் வேண்டும். அதற்குரிய தகவல்கள் தமது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததல்லாத விண்ணப்பப் படிவங்களும், முழுமையான தகவல்களைக் குறிப்பிடாத விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல்

பயனுடையதாகும்.) மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததா என்பதை விண்ணப்ப தாரியால் விசாரித்துப் பார்க்க வேண்டும். அல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

8.2 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற எண்ணும் மொழி மூலமே விண்ணப்பிக்க வேண்டும்.

8.3 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2014.10.27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக் கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தின் அஞ்சலுறையின் இடது மேல் மூலையில் "II ஆம் தர ஜெய்லர்/II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2014" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தயார் செய்யும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் அவசியம். ஆண்பாலார் இரு (2) பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் ஒரே விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

8.4 வர்த்தமானியில் குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முழு முடிவுடன், குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி, குறிப்பிட்ட திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் விண்ணப்பதாரி இப்பதவியைப் பெறுவதற்கான தகைமைகளை உடையவரென கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு வர்த்தமானியின்படி தகைமைகளை உடையவரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் அவரது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படும்.

8.5 விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற சட்ட நடவடிக்கை எடுக்கும் (நொத்தாரிசு) அதிகாரி, முப்படையின் அத்தியட்சகர் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி வெளியிட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடமொன்றுக்கு 2,40,360 ரூபாவுக்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் அல்லது அரச/மாகாண அரச சேவை யிலுள்ள ஆளொருவரெனில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர் தமது விண்ணப்பப் படிவத்தைத் திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இத்தகைய உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போது சேவை செய்யும் நிறுவனத்தி லிருந்து விடுவிக்க முடியுமென நிறுவனத் தலைவரினால் உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.6 உரிய திகதியில் கட்டணம் செலுத்தப்படாத அல்லது முறையாகப் பூர்த்திசெய்யப்படாத நிலையிலுள்ள விண்ணப் பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் பற்றிய நட்டத்தை விண்ணப்பதாரியால் ஏற்றுக்கொள்ள வேண்டும். அஞ்சல் செய்வதில் ஏற்படும் தாமதங்களோ அல்லது விண்ணப்பம் தொலைவதைப் பற்றிய எதுவித காரணங்களும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

8.7 விண்ணப்பம் பெறப்பட்டதாக அறவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப் பட்டமை பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் செய்தித்தாள்களில் அறிவித்தல் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்பும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் உள்ளதன்படி அதைப் பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அங்கு தங்களது பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் முழுப்பெயர் குறிப்பிடல் வேண்டும். தாங்கள் கொழும்பிற்கு வெளிப் பிரதேசத்தில் விண்ணப்பித்தவராயின், உங்களது மேற்கூறிய தகவல்கள் அடங்கிய கடிதம், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதி ஒன்றை உங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அதை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரித்தல் சிறந்த தாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதிப்படுத்து வதற்காக உங்களிடம் உள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்குரிய சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அஞ்சல் செய்யும்போது பதிவுத் தபாலினது பற்றுச்சீட்டையும் தயார்செய்து தங்கள் வசம் வைத்திருத்தல் பயன் தரும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சார்த்திகள் நியமிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திற்குள் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு முதலாவதாக பரீட்சை மண்டபத்திற்குத் தோற்றுவிக்கும் திகதியன்றே, அங்குள்ள பரீட்சாதிபரிடம் ஒப்படைக்க வேண்டும். பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாதோருக்கு பரீட்சைக்குத் தோற்றுவிக்க அனுமதி வழங்கப் படுவதில்லை. அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் நடைமுறைச் சட்டக்கோட்பாடு இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்திலேயே பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடைமுறை பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விடுவிக்கப்படும் சட்டக் கட்டளைகளுக்கு விண்ணப்ப தாரிகள் கீழ்ப்பணிய வேண்டும். அச்சட்ட கோட்பாடுகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விடுவிக்கும் தண்டனைகளுக்கு ஆளாகுவீர்கள்.

10. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்.**- விண்ணப்பதாரி தோற்றும் அனைத்து பாடங்களின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்து, அவர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **போலியான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப் பத்திரம் பூர்த்திசெய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைகளின்படி எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவரென கண்டுபிடிக்கப்பட்டால்

பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் அவரது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச்செய்யப்படலாம். விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எவையேனும் எச்சந்தர்ப்பத்திலேனும் பொய்யானவை எனத் தெரியவருமிடத்து அல்லது ஏதேனும் முக்கிய தகவலை அவரால் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படலாம்.

12. **பரீட்சை முறைமை மற்றும் மொழி மூலம்** :

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் ;
(ii) தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. **சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- எழுத்துமூலப் பரீட்சை.- கீழ்க்காணும் பாடங்களை உள்ளடக்கிய 3 வினாப்பத்திரங்களை உடைய எழுத்துமூலப் பரீட்சை நடைபெறும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெறுவதற்கு ஆகக்குறைந்த புள்ளிகளாக 40% புள்ளிகளேனும் பெறல் வேண்டும். பரீட்சார்த்தி அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை.- (i) மேலே இல. 6 இல் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்புச் செய்யும் தகைமைகளை உடையவரா மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பற்றிய எல்லைகளை உடையவரா என்பதைச் சோதிக்கும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்குக் குறையாத புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள், அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் பட்டியல்படுத்தப்பட்டு அவர்களில் பதவி வெற்றிடங்களைப்போல் (5) ஐந்து மடங்கு எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இப்பரீட்சை நடைபெறும் திகதி சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும்.

**கவனத்தில் எடுக்கவேண்டியவை**.- நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் பதவி நியமனம் பெறுவதற்குரிய தகைமையாகக் கருதப்பட மாட்டாது.

14. **எழுத்துமூலப் பரீட்சையின் பாடவிதானம்** :

(அ) நுண்ணறிவுப் பரீட்சை (காலம் : 1 மணித்தியாலயம் - மொத்தப் புள்ளிகள் - 100).- பரீட்சார்த்தியின் தர்க்கமுறைமை, சிந்தித்து சரியான முறையில் விவரிக்கும் திறன், தீர்மானங்கள் எடுப்பதில் உள்ள திறனையும் மதிப்பிடும் வகையில் இவ்வினாத்தாள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வினாப்பத்திரம் பலதரப்பட்ட மாதிரி வினாக்களுக்கும், குறும் பதில்கள் எதிர்பார்க்கும் விதமான 50 கேள்விகளையும் கொண்டிருக்கும். அனைத்து கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) பொது அறிவு (காலம் : 1 மணித்தியாலயம் - மொத்தப் புள்ளிகள் - 100).- தகவல் தொழில்நுட்பவியல், பரீட்சார்த்தி வசிக்கும் சூழல் உட்பட இலங்கையின் அரசியல், சமூகவியல், கலாச்சார மற்றும் பொருளாதார சூழலும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பாக பரீட்சார்த்திக்குள்ள அறிவைப் பரீட்சிக்கும் ஒரு பொது வினாத்தாள். இவ்வினாத் தாள் பல்தேர்வு சுருக்க விடை எதிர்பார்க்கப்படுகின்ற 50 வினாக்களைக் கொண்ட வினாத்தாளாக அமையும். அனைத்து கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(இ) கூட்டல் உட்பட கணிதம் (காலம் : 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் - 100) :

I ஆம் பகுதி.- கூட்டல் திறமையினை அளவிடும் பொருட்டு வினாத்தாளிலேயே விடையளிக்கக்கூடியவாறு வினாத் தாள் தயாரிக்கப்படும். அனைத்து கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

II ஆம் பகுதி.- கணக்கெடுத்தல் திறமையை அளவிடும் பொருட்டு கட்டாயமாக விடையளிக்க வேண்டிய கணித சிக்கல்களைத் தீர்க்கவேண்டிய ஆறு கேள்விகளை உள்ளடக்கியதாக வினாத்தாள் அமைந்திருக்கும்.

15. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பதவிகளையோ அல்லது அனைத்து பதவிகளையுமோ நிரப்பாதிருக்க பதவி வழங்கும் அதிகாரிக்கு உரிமையுண்டு.

16. இங்கு குறிப்பிடாத ஏதேனும் காரணி இருப்பின், அதைப் பற்றி சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் தீர்மானங்கள் எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ள பொதுப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அடிபணிந்து நடப்பதற்கு உள்ளடங்கியுள்ளீர்கள்.

17. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுள் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படின், சிங்கள மொழியில் உள்ள அறிவித்தலே சரியானது என எண்ணி நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

சந்திரரத்ன பல்லேகம,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இல. 150, பேஸ்லைன் வீதி,
கொழும்பு 9,
2014, செத்தெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

சிறைச்சாலைகள் திணைக்களம்

**இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் II ஆம் தர ஜெய்லர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014**

Open Competitive Examination for the Recruitment of Jailor - Class II and Rehabilitation Officer - Class II in the Department of Prisons, Sri Lanka - 2014

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாம் தேர்வு | | |
| இரண்டாம் தேர்வு | | |

(வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆம் பந்திக்கிணங்க பரீட்சைக்குத் தோற்றவுள்ள நகரத்தை எழுத்து மூலமும் மற்றும் நகர இலக்கத்தையும் குறிப்பிடுக.)

விண்ணப்பிக்கும் பதவி :

II ஆம் தர ஜெய்லர் (ஆண்கள்) - 1
II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர் (ஆண்கள்) - 2
இரு பதவிகளுக்கும் (ஆண்கள் மாத்திரம்) - 3
II ஆம் தர ஜெய்லர் (பெண்கள்) - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)
(பின்னர் இதை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.
(உ-ம் : (GUNAWARDHANA, M. G. B. S. K.)
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆ) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(பரீட்சை அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

3. பால் (பெண்/ஆண்) :
பெண்-1, ஆண்-0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது :
திருமணமானவர்-1
திருமணமாகாதவர்-2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

6. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது (2014.10.27) :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

8. பிரசாவுரிமை (பரம்பரையினாலா/பதிவினாலா என்பது) :----.

9. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை (முதலாம் அமர்வு) :

(i) பரீட்சை ஆண்டு :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (சா. த.) பரீட்சை (இரண்டாம் அமர்வு) :

(i) பரீட்சை ஆண்டு :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :

(i) பரீட்சை ஆண்டு :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

10. பிற தகைமைகள் :----.

11. ஏதேனும் தவறு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அது பற்றிய சகல விபரங்களையும் தரவும் : ----.

12. பரீட்சைக் கட்டணம் செலுத்தல் :

(1) செலுத்தப்பட்ட தொகை :----.
(2) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(3) செலுத்திய திகதி :----.
(4) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

கழறாதவாறு பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனளிக்கும்)

*13.* விண்ணப்பதாரியின் உறுதியுரை :

என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகிறேன். மேற்படி மொழி மூலத்தால் பரீட்சையில் தோற்றுவதற்கு உரித்துள்ளதென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஏதேனும் பகுதி பூர்த்தி செய்யப்படாமையினாலும் பிழையாகப் பூர்த்தி செய்திருப்பதினாலும் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் பூர்த்திசெய்துள்ளேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிட்டுள்ள விபரங்களில் ஏதேனும் ஒன்று பிழையானது அல்லது பொய்யானது என உறுதியாகுமிடத்து, தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவனாவேன் எனவும் நியமிக்கப்பட்டதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கம் செய்வதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டவிதிகளுக்கு நான் உட்படுவேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*14.* கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல்.- (இவ்வர்த்தமானி அறிவித்தலின் 9.4 இற்கு அமைய இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி .............................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். இன்றும் அவர் என் முன்னிலையில் ..................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும், பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்).

*15.* திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவரின் உறுதியுரை :

திரு./ திருமதி/ செல்வி ........................................... இத்திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரின் சேவை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும், இப்பதவிக்குரிய அறிவித்தலின்படி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்றும் அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். (தேவையற்ற சொற்களை வெட்டவும்.)

----,
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்).

9-907